பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 23 | புதன்கிழமை | (08.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 264

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

## கழுத்தில் வெட்டுக் காயத்துடன் இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

### யாழ். நாயன்மார்கட்டில் பரபரப்பு



(யாழ்ப்பாணம்)

கோரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று நாயன்மார்கட்டு பிள்ளையார் கோவில் குளத்துக்கு முன்பாகக் காணப்பட்டது.

இச் சம்பவத்தில் சடலமாகக் காணப்பட்டவர் கட்டப்பிராயைச் சேர்ந்த நவரத்தினராசா பிறேம்குமார் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் யாழ். நகரில் புடைவைக் கடையொன்றில் சிப்பந்தியாகக் கடமை புரிபவர்.

சிறிய பெண் குழந்தையொன்றின் தந்தையான பிரஸ்தாப நபரை நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந்தெரியாத இளைஞர்கள் சிலர் விசாரணை என்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள

## பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக்கள பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் தலைமை அதிகாரி லாச்சோ கொப்பர்பிளைக் இவ் வாரம் இலங்கைக்கு வரவுள்ளார்.

அவர் கொழும்பில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இவர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் தலைமை அதிகாரியாக 2002 ஆம் ஆண்டு பதவியேற்றார்.

பதவியேற்ற காலப்பகுதியிலிருந்து பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் நாடுகளுடன் தனது கருத்துக்களை பகிர்ந்து வருகிறார்.

அந்த வகையிலேயே இவரின் இலங்கை விஜயம் அமையவுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. இதேவேளை இராஜாங்கத் திணைக்களப் பயங்கரவாத தடுப்புப் பிரிவு, ஏனைய நாடுகளின் பயங்கரவாத தடுப்புத் துறையினருக்கு பயிற்சியையும் உதவிகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-121)

### வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்

# சமாதானம் இழுத்தடிக்கப்படுமானால்

# யுத்தம் ஏற்படுவதை தவிர்க்கமுடியாது!

### இரா. சம்பந்தன் எம்.பி. அரசுக்கு எச்சரிக்கை

(நமது நிருபர்)

**மந்த கதியில் செல்லும் சமாதான முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடித்துக் கொண்டு வருமானால் காலப்போக்கில் யுத்தநிறுத்த் உடன்படிக்கைக்கு ஆபத்து ஏற்படுவதுடன், மீண்டும் யுத்தம் ஒன்று வெடிப்பது தவிர்க்க முடியாது போய்விடுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் சமாதான முயற்சிகள் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாலும் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஸ்திர நிலையில் இருப்பதாலும் யுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய ஆபத்து இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. இரா. சம்பந்தன் நேற்று பாராளுமன்றத்தில் கூறியதைத் தொடர்ந்து அவர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு அபாய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அவ் விடயம் தொடர்பாக அவர் மேலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுவினைஞர் சேவை வெட்டுப்புள்ளி வெளியானது

### யாழ்ப்பாணம் 126 புள்ளிகள்

(கொழும்பு)

அரசாங்க எழுதுவினைஞர் சேவை மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்குமான வெட்டுப்புள்ளி விபரம் அரசினால் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்க எழுதுவினைஞர் சேவைக்கு மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விபரம் வருமாறு,

யாழ்ப்பாணம்-126, முல்லைத்தீவு-121, மன்னார்-118, வவுனியா-123, கிளிநொச்சி-119, திருகோணமலை, மட்டக்களப்பு-125, அம்பாறை-135, பதுளை-137, இரத்தினபுரி-136, நுவரெலியா-132 புள்ளிகள் கணக்குப் பதிவாளர் சேவைக்கு மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விபரம் வருமாறு,

நுவரெலியா மாவட்டம்-205, யாழ்ப்பாணம்-205, முல்லைத்தீவு-195, திருகோண

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் ஜப்பானுக்குச் சென்றுள்ளார்.

ஜப்பானிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஹவாக்குச்சியின் அழைப்பினை ஏற்றே அவர் அங்கு சென்றுள்ளார்.

இவ் விஜயத்தின்போது இலங்கைக்கான நிதியுதவிகள், இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் ஐந்து சட்டமூலங்களில் மூன்றை-உயர் நீதிமன்றம் ஏற்றுள்ளது!

### பாராளுமன்றில் சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கென அனுப்பப்பட்ட சட்டமூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் முடிவுகளை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார பாராளுமன்றில் நேற்று அறிவித்தார்.

ஜனாதிபதியினால் அனுப்பப்பட்ட 5 சட்டமூலங்களில் மூன்று சட்டமூலங்கள் அரசியல் அமைப்புக்கு முரணானவை அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் தொடர்பான சட்ட மறுசீரமைப்பு, உள்நாட்டு வரி மறுசீரமைப்பு, நிதி ஆகிய மூன்று சட்டமூலங்களே உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய இரண்டு சட்டமூலங்களில் சேர்க்கப்பட்டுள்ள சில சரத்துக்கள் அரசியல் அமைப்புக்கு முரணான

(12 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர்க் கந்தனின் நேற்றைய வீதியுலாக் காட்சி

## அமைச்சரவையில் மாற்றம் அடுத்த வாரம் இடம்பெறும்?

### அரசாங்க வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் ஒன்று அடுத்த வாரத்தில் இடம்பெறவிருப்பதாக அரசாங்க வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்கத்துடன் இணைந்ததன் அடிப்படையில் இந்த மீளமைப்பு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதன் அடிப்படையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு தோட்ட உட்கட்டமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு என்பன ஒதுக்கப்படவிருக்கின்றன. எனவே அதற்குப் பதிலாக சி.பி. ரத்னாயக்காவுக்கு தோட்ட கைத்தொழில் அமைச்சும், அமைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாதுகாப்புப் படைப்பிரிவைப் பலப்படுத்தும் முயற்சி

# ஆயுத, தளபாடங்களை வழங்க ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

முப்படை, விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் ஆகிய பாதுகாப்பு படைப் பிரிவுகளுக்குத் தேவையான ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் விநியோகிக்க ஜனாதிபதி அனுமதியளித்துள்ளார்.

அவற்றை விநியோகிப் பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்புப் படைப் பிரிவுகளில் நீண்டகாலமாகப் பல குறைபாடுகள் நிலவுகின்றன. அவற்றில் ஆயுதப் பற்றாக்குறைகளும், இராணுவத் தளபாடக் குறைபாடுகளும் முக்கியமானவை. அவற்றை விநியோகிப்பதற்கு தற்போது ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார். இந்தக் குறைபாடுகள் குறித்து பாதுகாப்பு குழு தற்போது ஆலோசித்து வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட பின்னர் திலக்ரணவிராஜா நேற்றுமுன்தினம் முதன் முறையாக விசேட அதிரடிப் பிரிவுத் தலைமையகத்துக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு விசேட அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட இவர் விசேட அதிரடிப் படைப் பிரிவு தலைமையகத்தை சுற்றிப் பார்வையிட்டு, அங்கு நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா, விசேட அதிரடிப்படையினர் கட்டளையிடும் தளபதி நிமால்லியூகே ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

அங்கு அவர் விசேட அதிரடிப் படை அதிகாரிகள், படை வீரர்கள் மத்தியில் பேசுகையில்,

நாட்டின் பாதுகாப்பு பிரிவுகளில் பல குறைபாடுகள் நிலவுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன். இந்தக் குறைபாடுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு குழுக் கூட்டங்களில் ஆலோசித்து வருகிறார். பற்றாக்குறையாக உள்ள ஆயுதங்களை வழங்கவும் அவர் அனுமதியளித்துள்ளார்.

விசேட அதிரடிப்படையில் அதிகமான குறைபாடுகள் நிலவுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. இந்தக் குறைபாடுகளை களைவதற்குரிய நடவடிக்கைளை நான் விரைவில் மேற்கொள்ளவுள்ளேன்.

நுவரெலியாவில் விசேட அதிரடிப் படைப்பிரிவின் பிராந்திய தலைமையகமொன்றை நிறுவுவதற்கும் தற்போது ஆலோசித்து வருகின்றோம். பொலிஸ் திணைக்களத்தில் அண்மைக்காலமாக பல நிர்வாகச் சிக்கல்கள் தலை தூக்கியுள்ளன. இது குறித்தும் பொலிஸ் திணைக்கள சிவில் நிர்வாக பிரச்சினை குறித்தும் வெகு விரைவில் கலந்துரையாடவுள்ளோம்.

நாட்டில் வேகமாக அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகள் பொலிஸாருக்கு வழங்கப்படவுள்ளன. அதற்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, நர்ட்டில் இடம் பெற்றுவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம். இதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் அமையும். இந்தத் திட்டத் துக்கமைய குற்றச் செயல்களை, குறைப்பது குறித்து மற்றுமொருமுறை கூடி ஆராயப்படும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் இப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

யுத்த காலத்தில் அதிரடிப்படை வீரர்கள் பெருமளவில் தமது உயிரைத் தியாகஞ் செய்துள்ளனர்.

பலர் காயங்களுக்குட்பட்ட நிலையில் அங்கவீனர்களாக வாழ்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் நன்றி கூற வேண்டியது எமது கடமையாகும் எனத் தெரிவித்தார். (ற)

### வெளிச்சம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிமீழ விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் 87ஆவது இதழ் நேற்று வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவின் கருத்துரையுடன் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.(க)

### குளங்கள் புனரமைப்பு

அரச சார்பற்ற நிறுவனமான சமூக நம்பிக்கைநிதியம், புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஒட்டுவெளி, நோனாமடு, பெறிய சலங்கை விவசாய குளங்களை புனரமைக்கும் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் 180ஏக்கர் நிலப் பரப்பில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-15)

## ஜனாதிபதி-இ. தொ. கா. தலைவர்

## திங்களன்று இரகசியப் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் நேற்றுமுன்தினம் சந்தித்து பேசியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், அரசின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்க, அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர ஆகியோர் கலந்துகொண்டதாகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமான் மட்டுமே கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கத்திற்கு ஆதரவுவழங்குவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்ததையடுத்து, இடம்பெற்ற முக்கிய பேச்சுவார்த்தையாக இது கருதப்படுகின்றதுடன், இந்தப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட விடயங்கள்பற்றி இதுவரை ஏதுவும் வெளியிடப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-61)

## கனடாவின் பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஏனைய நாட்டுத் தமிழர்களுக்கும் அழைப்பு

கனடா ரொறன்ரோவில் ஒன்ராறியோ மாகாணப் பாராளுமன்றத் திடலில் எதிர்வரும் 25ஆம் திகதி பொங்குதமிழ் நிகழ்வுகளை வெகுசிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்லின சமுதாயக் கட்டமைப்பைக் கொண்ட கனேடிய தேசத்தின் பிரதான நீரோட்டத்தின் உறுதியான சக்தியாக தம்மை அடையாளப்படுத்தவும், தாயகத் தமிழர்களுடனான தமது உறவுப் பேணலை வெளிப்படுத்தவும் நடைபெறும் இந் நிகழ்வுகளில் ஏனைய நாடுகளில் வதியும் தமிழர்களையும் கலந்து கொள்ளுமாறு கனடா தமிழ் மாணவர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழர் தேசியம், தமிழர் தலைமை, தமிழர் தாயகம், சுயநிர்ணயம் போன்ற பொங்குதமிழின் அடிப்படைகளை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தும் இந் நிகழ்வில் குறிப்பாக ஏனைய நாடுகளிலுள்ள தமிழ் மாணவர் அமைப்புக்கள் மற்றும் தமிழர் நல அமைப்புக்கள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்குமாறு விழா ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை வாழ்த்துச் செய்திகளையும், பொங்குதமிழ் ஆக்கங்களையும் வழங்க விருப்புபவர்களும் விழா அமைப்பாளர்களுடன் தொடர்புகொண்டு அதனை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3இலட்சம் பேரைக் கொண்டுள்ள கனடியத் தமிழ்ச் சமுதாயம் இந்நிகழ்வு மூலம் காத்திரமான ஒரு சமுதாயமாக ஒரே தலைமையின் கீழ்த் தம்மைப் பிரகடனப் படுத்தி, தற்போது சர்வதேச ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளில் காத்திரமான பங்கு வழங்கவேண்டிய கடப்பாடை கனடா அரசிற்குத் தெரிவிக்கும் ஒரு நிகழ்வாகவே இதனை முன்னெடுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

(ற)

**35 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட**

# தமிழ்க் கைதியை உடனடியாக விடுவிக்குமாறு ஐ.நா. மனித உரிமை அமைப்பு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் கடந்த 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பைச் சேர்ந்த நல்லரட்ணம் சிங்கராசா (வயது 28) என்பவரை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பு அரசாங்கத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட இவர், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டார். இவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் 50வருட சிறைத்தண்டனை விதித்தது. இத் தீர்ப்பை எதிர்த்து சட்டத்தரணிகள் வாதாடிய போது சிறைத்தண்டனை 35வருடங்களாக குறைக்கப்பட்டது.

இவ் இளைஞரது சிறைத்தண்டனை இன்னும் குறைக்கப்பட வேண்டும் எனக்கோரி சட்டத்தரணிகளான விநாயகமூர்த்தி மற்றும் ரஞ்சித் பொனான்டோ ஆகியோர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் செய்த முறைப்பாடு ஏற்றக்கொள்ளப்பட்டதையடுத்தே, 2000ஆம் ஆண்டு விநாயகமூர்த்தியும் ரஞ்சித் பெனான்டோவும் இணைந்து ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பிடம் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பு கைதுசெய்யப்பட்டுச் சிறையிலிருக்கும் பிரஸ்தாப இளைஞரை உடனடியாக விடுதலை செய்யும்படியும், அவ் இளைஞனுக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளதுடன், முறைப்பாடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை ஒன்றை 90 நாட்களுக்குள் தமக்கு அனுப்பிவைக்குமாறு கடந்தவாரம் இலங்கை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.(ற-19)

## நயினை~நல்லூர் திருத்தல

## பஜனைப் பாத யாத்திரை

நல்லூர் கந்தன் தேர்த்திரு விழாவையொட்டி ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் நயினை நல்லூர் பஜனைப் பாத -யாத்திரை வழமைபோல் இம்முறையும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து திருமுறை பஜனையை முடித்துக் கொண்டு மறுநாள் சனிக்கிழமை காலை பூசையின் பின் வேல் பூஜையுடன் வேல் எடுத்துக்கொண்டு குறிகட்டுவான் மனோன்மணி அம்பாள் ஆலயத்தை நோக்கிய இப் பாத யாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

பின்னர் அங்கிருந்து புங்குடுதீவு காளிகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம், இராஞ்சி முருகன் ஆலயம், பெருங்காடு மூத்தநயினார் புலம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆயலம், தென்பெருந்துறை சிவன் ஆயலம், மற்றும் ஆதி வைரவர் ஆலயம் ஆகியவற்றிற்குச் சென்று அங்கு இடம்பெறும் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு விட்டு, கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அன்றையதினம் தங்கிப் பஜனை நடைபெறவுள்ளது.

மறுநாள் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாத யாத்திரை அங்கிருந்து புறப்பட்டு மண்டைதீவு வெளி முருகன் ஆலயம் விநாயகர் ஆலயம், வேலணைத்துறை முருகன் ஆலயம் ஐயனார் ஆலயம் வேலணை வங்களாவடி முருகன் ஆலயம், ஆதி வைரவர் ஆலயம் மற்றும் மண்கும்பான் விநாயகர் ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று பின் அல்லைப்பிட்டி மண்டைதீவு-பண்ணை வழியாகக் கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தை வந்தடையும்.

அதன்பின்னர் பாத யாத்திரை அங்கிருந்து புறப்பட்டு யாழ்பஸ்நிலைய வைரவர் ஆலயம், சத்திரம் ஞான வைரவர் ஆலயம், கொட்டடி கூழாவடி வைரவர் ஆலயம் மற்றும் நாவாந்துறை நாகபூஷணி அம்பாள் ஆலயம் ஆகியவற்றிற்குச்சென்று அன்றிரவு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தங்கிப் பஜனைகளும் நடைபெறும்.

மறுநாள் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை அங்கிருந்து புறப்பட்டு சீனிவாசகம் வீதி வழியாக சிவன் காளியம்பாள் ஆலயம் பெருமாள் கோவில் வழியாக கந்தர்மடம் சிவ உதயநாகபூஷணி அம்பாள் ஆலயம் ஆகிவற்றிற்குச் சென்று அங்கு விசேட பூசைகளில் கலந்து கொண்டு விட்டு, தொடர்ந்து அரசடி வழியாக நல்லை ஆதீனம் சென்று நல்லைக் கந்தன் திருத்தேரின் பின் திருவீதி பஜனை நடைபெறும். (க)




உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகம் செல்வநாயகபுரத்தில் நடமாடும் வைத்திய சேவையினை நடாத்தியது. இதில் கலந்துகொண்ட மருத்துவ உத்தியோகத்தர், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திர பாலன் மற்றும் பாடசாலை அதிபர் த.ஜெகநாதன், அருட்தந்தை ஏ.பி.சுரேந்திரன் ஆகியோர் மங்கள வாத்தியத்துடன் பாடசாலை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படும் காட்சி.

# நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

*யாழ்ப்பாண மாநகர பிரதேச நீர் பாதுகாப்பு சூழல் முகாமைத்துவத் திட்டம்.*

*நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது.*

# கேள்வி அறிவித்தல்-இல.01

1. ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின அடிப்படையில் மேற்படி திட்டத்திற்கான நிதி இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்படுள்ள அட்டவணைகளில் விபரிக்கப்பட்ட யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட சிறு குளங்களை புனரமைக்கும் வேலைகளுக்காகவும் சிறிய கட்டட நிர்மாண வேலைகளுககாகவும் பகிரங்க கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

2. மாவட்ட செயலாளா/அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் அவர்களால் மூடிய கேள்விகள் இக்ராட் ஒப்பந்தக்காரரிடமிருந்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 500/-ப்படி பணமாக அல்லது மாநகர ஆணையாளர் பெயருக்கு மாற்றக் கூடியதான காசுக் கட்டளை/வங்கி ஒலை ஆக யாழ். மாநகர ஆணையாளரிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை அவரிடம் 09.09.2004ல் இருந்து 20.09. 2004 பிற்பகல் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

4. கேள்வி தாரர்கள் வேலைநேரங்களில் மாநகர சபை 'வேலைகள் பொறியியலாளா' காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விபரங்களையும் பெறலாம்.

5. சமர்பிக்கப்படும் கேள்விகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்கு செலலுபடியானதாக இருத்தல வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு,"மாவட்ட செயலாளா/அரச அதிபர், மாவட்ட செலகம், யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்கு தனித்தனி உறைகளில் இடப்பட்டு 22.09.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப் பகுதிக் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப் பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

6. அதே தினம் 15.00 மணிக்கு கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

## வேலைத்திட்டம் -01 சிறுகுளங்களைப் புனரமைத்தல் விபர அட்டவணை

| வேலையின் பெயர் | இக்ராட நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத பணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| 1.நெடுங்குளம்,கொழும்புத்துறை கிழக்கு(jpo/wc/po/1/03) | 09 | 6,000.00 | 500.00 |
| 2.உப்புக்குளம்,கொழும்புத்துறை கிழக்கு (jpo/wc/po/1/05) | 09 | 7,500.00 | 500.00 |
| 3. பால்குளம்,சுண்டுக்குளி (jpo/wc/po/1/10) | 09 | 11,500.00 | 500.00 |
| 4. மறவக்குளம்,சுண்டுக்குளி (jpo/wc/po/1/11) | 09 | 6,000.00 | 500.00 |
| 5. மூண்டுக்குளம், குருநகர் (jpo/wc/po/1/13) | 09 | 9,000.00 | 500.00 |
| 6.தேவரிக்குளம்,மடத்தடி குருநகர் (jpo/wc/po/1/14) | 09 | 17,000.00 | 500.00 |
| 7புல்லுக்குளம்,(கட்டம் 01)வண்ணார்பண்ணை தென்கிழக்கு (jpo/wc/po/1/15) | 09 | 25,000.00 | 500.00 |
| 8.கன்னாதிட்டிக்குளம், வண்ணார்பண்ணை தென்கிழக்கு (jpo/wc/po/1/18) | 09 | 26,000.00 | 500.00 |
| 9.கற்குளம் வண்ணார்பண்ணை தென்மேற்கு(jpo/wc/po/1/19) | 09 | 3,000.00 | 500.00 |
| 10.நாச்சிமார் கோயில்குளம் வண்ணார்பண்ணை வடமேற்கு (jpo/wc/po/1/25) | 09 | 5,000.00 | 500.00 |
| 11.ஆரியகுளம்(கட்டம் 01) வண்ணார்பண்ணை தென் கிழக்கு (jpo/wc/po/1/30) | 09 | 21,000.00 | 500.00 |
| 12.பிராமணகட்டுக்குளம், நல்லூர் தெற்கு (jpo/wc/po/1/31) | 09 | 23,000.00 | 500.00 |
| 13.நரியன்குண்டுக்குளம் வணார்பண்ணை வடகிழக்கு (jpo/wc/po/1/43) | 09 | 4,000.00 | 500.00 |
| 14.வண்ணான்குளம், கொழுமபுத்துறைகிழக்கு(jpo/wc/po/1/04) | 09 | 10,000.00 | 500.00 |
| 15.நீர்நொச்சி தாழ்வுக்குளம் அரியாலை மத்தி(jpo/wc/po/1/36) | 09 | 13,000.00 | 500.00 |

## வேலைத்திட்டம் -02 கூட்டெரு தயாரிக்கும் ஆலை, காக்கைதீவு திடல் விபர அட்டவணை

| வேலையின் பெயர் | இக்ராட நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத பணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| கூட்டெரு தயாரிக்கும் கட்டடம் அலுவலக/களஞ்சிய கட்டடம் கட்டம் 01 (jpo/wc/sw/1/01) | 09 | 34,000.00 | 1,000.00 |

07.09.2004
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.

**செ.பத்மநாதன்**
மாவட்ட செயலாளர்/அரசாங்க
அதிபர் கேள்விச்சபைத் தலைவர்/
யாழ்ப்பாணம்.

6th months

யாழ்ப்பாணத்தில்

**M. M. I. C**

20%கழிவு


வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை சார் தபால் மூலம் கற்கை நெறி

**Diploma in massmedia**

Dip. in. m. m. (srilanka) சான்றிதழ்

இல.15, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

(C/443) Call:- 0777 316258





அண்மையில் நடைபெற்ற கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவின் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச ஒய்வூதியர் சங்கத் தலைவர் கே. தங்கவடிவேல் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சங்கப் பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் நிற்பதனை முதலாவது படத்திலும், விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட முன்பள்ளி மாணவர்களை மறு படத்திலும் காணலாம். (படங்கள்:-இருபாலை நிருபர்)

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

## விவாத அரங்கு -5

விடயம்

வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது-
பாதுகாக்கின்றது-

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள

*அனுப்பவேண்டிய முகவரி*
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# பள்ளிச்சிறார்கள் பலியாவதற்கு பெற்றோர்களே காரணமாம்

## ரஷ்ய அதிகாரிகள் தெரிவிப்பு

ரஷ்யாவில் பெஸ்லன் நகரில் பள்ளிக்குள் நுழைந்த தீவிரவாதிகளிடம் பிடிபட்டவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் தான் தீவிரவாதிகள் மீதான தாக்குதலை ஆரம்பித்தனர் என்றும், பிணைக் கைதிகளை மீட்க தாக்குதல் நடத்தும் திட்டம் அரசுக் கு இருக்கவில்லை எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

பெற்றோர்களும் உறவினர்களும் தாக்குதல்களை ஆரம்பித்த பிறகே உள்ளூர் கலவரத் தடுப்பு பொலிஸார் இத் தாக்குதலில் ஈடுபட்டனர் என பெடரல் செக்யூரிட்டி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



ஆரம்பத்தில் எந்தவிதமான வெடிச்சத்தமும் இன்றி லேசான துப்பாக்கிச் சூட்டுடன் ஆரம்பித்து, பிறகு கடுமையான துப்பாக்கிச் சண்டை மூண்டதாகவும் சம்பவத்தைப் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்துவது குறித்தும், பொறுப்புகள் குறித்தும் ரஷ்ய அதிரடிப் படைகள் திட்டமேதும் வைத்திருக்கவில்லை எனவும் இதனாலதான் அதிகளவில் இழப்புகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# அமெரிக்கக் கடற்படையினர் மீது முஸ்லிம் தீவிரவாதிகள் தாக்குதல்

## 6 பேர் பலி, 8 பேர் படுகாயம்

(பலுஜா)

ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்கக் கடற்படையினர்மீது முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 6 பேர் பலியாகியுள்ளதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தை அடுத்துள்ள புனித நகரான பலுஜா நகரில் பெருந தொகையான முஸ்லிம் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளதுடன் அப்பகுதிகளை வலுவான பாதுகாப்புப் பிரதேசமாக பலப்படுத்தியும் வைத்துள்ளனர்.

இந்நிலையில் பலுஜா நகரின் சாக்லாவிய எனும் பகுதியூடாக கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக வாகனங்களில் ரோந்து சென்றுகொண்டிருந்த அமெரிக்காவின் கடற்படையினர் மீது முஸ்லிம் தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதலை நடத்தினர்.

முஸ்லிம் தீவிரவாதிகளின் இத்திடீர்த் தாக்குதல்களில் 6 அமெரிக்கப்படையினர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன் அவர்கள் சென்ற வாகனங்களும் எரிந்து சேதமாகின. (ப)

WORLD NEWS உலக தரிசனம்

# ராட்சசியோ.. தேவதையோ..



ராட்சசியோ, தேவதையோ இரண்டும் சேர்ந்த பெண்ணோ என்று பாடத் தோன்றும் இந்த அழகிதான் ஜப்பானின் புதுமாடல் அழகியாக தேர்ந்தெடுக கப் பட்டுள்ளார்.

டிரயம்ப் இன்டர்நேஷனல் என்ற உள்ளாடை நிறுவனம் நடத்திய மாடல அழகிகளுக்கான தேர்வில் 427 அழகிகள் கலந்து கொண்டனர். இதில் யுமி சரக்கி என்ற இந்த இளம்பெண்தான் முதல் இடம் பிடித்துள்ளார்.

இதனையடுத்து கைநிறைய சம்பளத் துடன் அந்த நிறுவனத்தில் இவருக்கு வேலையும் கிடைத்துள்ளது. (ப)

# பாகிஸ்தானில் பின்லேடன்!

(நியூயோர்க்)

சர்வதேச தீவிரவாதியான ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவினால் தேடப்பட்டுவரும் ஒஸாமாபின்லேடன் பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தான் எல்லைப்புறத்தில் வாழ்ந்துவருவதாகவும், இவருக்கு அப்பிரதேசங்களில் வாழும் பழங்குடி இனத்தவர்கள் உதவிகளை வழங்கிவருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படிபகுதிகளில் பதுங்கிவாழும் பின்லேடன் அவ்வப்போது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பிலுள்ள காஷ்மீர் பகுதிகளுக்குச் சென்றுவருவதாகவும் அமெரிக்காவின் புலனாய்வாளர் பேராசிரியர் பீட்டர் பெர்கன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளின் செயற்பாடுகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுவரும் பேராசிரியர் பீட்டர் பெர்கன் வெளியிட்டுள்ள தகவல்களின்படி பாகிஸ்தானில் தலைமறைவாகியுள்ள பின்லேடன் உடல்நலத்துடன் இருப்பதாகவும் பல்வேறு தீவிரவாத அமைப்புகளுக்கும் உதவிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சர்வதேச மொடல் அழகி



சர்வதேச மொடல் அழகி போட்டி சீனாவின் ஹன்சு நகரில் நடைபெற்றது. இந்த போட்டியில் 29 நாடுகளைச் சேர்ந்த 46 மாடல் அழகிகள் கலந்து கொண்டனர். அதில் சீனாவை சேர்ந்த லீசி னிங் (நடுவில்) சர்வதேச மாடல் அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உக்ரேன் நாட்டை சேர்ந்த ஜூலியா லோஸ்னிக் (இடது பக்கம்) 2 ஆவது இடத்தையும், தென்கொரியாவின் கோன்ஹிஸ்ன்ஜி 3 ஆவது இடத்தையும் பிடித்தனர். (ப)

# பள்ளிச்சிறார்கள் பலியாகக் காரணமான பழைய மாணவன்!

## திடுக்கிடும் தகவலால் ரஷ்யாவில் பரபரப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் பெஸ்லான் பள்ளியினுள் புகுந்து தாக்குதல்களை நடத்திய தீவிரவாதிகள் குழுவின் அணித் தலைவர் ஒருவன் அதே பள்ளியிலேயே படித்த பழைய மாணவன் என திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் ரஷ்யாவின் வடக்கு மாகாணத்திலுள்ள ஒசெட்டா மாகாணத்தின் பெஸ்லான் நகரப் பாடசாலையினுள் புகுந்த தீவிர வாதிகள் அங்கிருந்த 400 இற்கும் மேற்பட்டோரை பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்ததை தொடர்ந்து இடம பெற்ற மோதல்களில் சுமார் 400 வரையிலான பள்ளிச் சிறார்களும், பெற்றோர்களும் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்திற்குக் காரணமான தீவிரவாதக் கும்பலின் அணித் தலைவர்களுள் ஒருவன் அதே பாடசாலையின் பழைய மாணவன் ஆவான். இதனாலேயே ஆசிரியர்களையும் மாணவர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தபோது சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளின் அணித் தலைவர்களுள் ஒருவனான பெஸ்லன் பள்ளியின் பழைய மாணவன் தனது முகமூடியை கழற்றவே இல்லை.

முகமூடியைக் கழற்றினால் ஆசிரியர்கள் தன்னை இனம் கண்டுகொள்வார்கள் என்ற அச்சத்திலேயே அவன் தன் முகமூடியை கழற்றவில்லை என அந்தக்கல் நெஞ்சனுக்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (ப)



அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி இடம பெறவுள்ளது. இதில் போட்டியிடும் ஜோர்ஜ் புஷ் இறுதி கட்ட பிரசாரத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளார். அவருடன் மனைவி லாரா புஷ்சும் சென்று வாக்குவேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

லியோரிட்ஜ் பகுதியில் நடந்த தேர்தல் பேரணியில் ஜோர்ஜ் புஷ்சும் அவரது மனைவியும் மேடையில் நின்று பொதுமக்களை பார்த்து கை அசைத்த காட்சி.



அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் பயங்கர சூறாவளி புயல் வீசி வருகின்றது. கடலில் சென்ற படகுகள் சூறாவளியில் சிக்கி கடற்கரைப்பகுதியில் ஒதுங்கியுள்ளன.

# டெண்டுல்கர் வழங்கிய வாய்ப்பை காப்பாற்றுவாரா ரோஹான்?

சச்சின் டெண்டுல்கரால் தனக்குக் கிடைததிருக்கும் அரியவாய்பபை உரிய முறையில் பயன்படுத்தி, இந்திய அணியில் தனக்கென ஒரு இடத்தை நிலையாகப் பெறுவாரா ரோஹான் கவாஸ்கர்,

பன்னிரண்டு நாடுகள் பங்குபற்றும் முக்கியத்துவம் வாய்ந்த மினி உலகக் கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இப் போட்டிகளில் இந்திய அணியின் நட்சத்திர ஆட்டவீரர் டெண்டுல்கர் விளையாடமுடியாத நிலையில், முன்னாள் இந்திய அணித் தலைவர் சுனில் கவாஸ்கரின் புதல்வர் ரோஹான் கவாஸ்கருக்கு இந்திய அணியில் இடம் கிடைததிருக்கிறது. தினேஷ் மோங்கியா உட்பட பல வீரர்களின் திறமைகளை பாரீசலித்த பின் ரோஹானுக்கே இந்த அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

உலகக் கிரிக்கெற் வரலாற்றில் சுனில் கவாஸ்கர் செய்திருக்கும் சாதனைகள் மறக்கமுடியாதவை. ஆனால் அவரது புதல்வர் இன்னும் தந்தையைப் போல் தனது முத்திரையைப் பதிக்கவில்லை. அணியிலும் தனக்கென ஒரு இடத்தைப் பிடிக்கவில்லை. இநநிலையில், டெண்டுல்கர் வழங்கியிருக்கும் இவ்வரிய வாய்ப்பை அவர் சிறப்பாக உரியவாறு பயன்படுத்த வேண்டும்.

இதேவேளை, யுவராஜசிங், வீரேந்தர் ஷெவாக் போன்றவர்களின் கிரிக்கெற் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாகவும் தந்த ஐ.சி.சி. சம்பியன் தொடர் அமையும்.

குறிப்பாக வீரேந்தர் ஷெவாக் அண்மைக்காலமாக மிகவும் மந்தமாகவே விளையாடுகிறார். இப் போட்டித் தொடரிலும் அவர் தனது துடுப்பாட்டத் திறமையை வெளிக் காட்டத் தவறினால் அணியில் அவா தனது இடத்தை இழக்க நேரலாம். (ற-7)



இங்கிலாந்து வீரர் பிராங் லம்பேட் எதிரணி வீரர் டேவிட் பெக்ஹாம் அடித்த உதையை கோலாக மாற்றுகிறார்.

# சம்பியன்ஸ் ஹொக்கிப் போட்டி இந்தியாவுக்கு விளையாட வாய்ப்பு

பாகிஸ்தானில எதிாவரும டிசமபர் 4ஆம் திகதி முதல் 12-ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கிப் போட்டியில் விளையாட இந்தியா தகுதி பெறவிலலை. ஆனாலும் அப்போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு இந்தியாவுக்குக் கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

பாகிஸ்தானின் லாகூரில் நடைபெறவுள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப் போட்டியில் மொத்தம் 6 நாடுகள் பங்கேற்கின்றன. எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 5ஆவது இடத்தைப் பெற்றிருந்தால் இந்தியா இப்போட்டிக்குத தகுதி பெற்றிருக்கும. ஆனால் 7வது இடமே கிடைத்ததால் அந்த வாய்ப்புக் கிட்டவில்லை.

ஆனால் இந்தியா எதிர்பாராத விதத்தில் அப்போட்டியில் பங்கேற்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகள் பாதுகாப்புக் காரணங்களால் இப் போட்டியில் பங்கேற்பது சந்தேகமாக இருப்பதாலேயே இந்திய அணிக்கு இவ் வாய்ப்புக் கிடைக்க ஏதுவாகலாம். இவ் விரு அணிகளும் போட்டியிலிருந்து விலகினால், இந்தியா அப்போட்டியில் விளையாட வாய்ப்புக்கிடைக்கும்.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக, பாகிஸ்தானில் விளையாடுவது தங்களுடைய வீரர்களுக்குப் பாதுகாபபாக இருக்காது என்று அவுஸ்திரேலியா ஏற்கனவே கூறியுள்ளது. எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றதால் சம்பியன்ஸ் கோப்பைப் போட்டியில் பங்குபற்ற வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. அதே நேரத்தில வீரர்களின் பாதுகாப்பு அதைவிட முக்கியமானது என்றும் அவுஸ்திரேலியா கூறியுள்ளது.

இதே காரணத்தைக்கூறி போட்டியில் பங்கேற்பது குறித்து நிச்சயமற்ற நிலையில் நியூசிலாந்து உள்ளது. எதென்ஸ் ஒலிம்பிக்கில் நியூசிலாந்து 6-வது இடத்தைப பிடித்திருந்தது. இது தொடாபாக ஆலோசனைகள் நடைபெறற வருவதாக நியூசிலாந்து ஹொக்கி கூட்டமைப்பின் தலைமை அதிகாரி ரமேஷ் படேல் கூறியுள்ளார். (ற-7)

## 22 வருடங்களின் பின்
# ரஷ்ய தடகளப் போட்டியில் அமெரிக்க வீரர்கள் பங்கேற்பு

அமெரிக்காவிற்கும் ரஷயாவிற்குமிடையியே தடகளப் போட்டிகள் 22ஆண்டுகளின் பின் நடைபெற்றுள்ளன.

மறைமுகமான பகை காரணமாக 1982ஆம் ஆண்டின் பின் ரஷ்யாவில நடைபெற்ற எந்தவொரு போட்டியிலும் அமெரிக்கா பங்கு பெறவில்லை தற்போது இருவல்ல ரசுகளும் இத் தடகளப் போட்டி மூலம் தமது உறவைுப் புதுப்பித்துள்ளன.

அண்மையில் நடைபெற்ற ரஷ்ய சலஞ்ச் தடகளப் போட்டிகளில் அமெரிக்க வீர, வீராங்கனைகள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

அண்மையில் ரஷ்யாவில் இடம் பெற்ற பாடசாலை ஒன்றில் பணயக் கைதிகளை மீட்கும் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செய்யும் வகையில் போட்டிகள் ஆரம்பமாக முன ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் தொடக்க விழாவிற்காக ஒழுங்கு செயயப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இரத்துச் செய்யப்பட்டுடன, போட்டிகளும் இருபதில் இருந்து பதினைந்தாக குறைக்கப்பட்டது.

எதென்ஸ் ஒலிம்பிக் தடகளத்தில் அமெரிக்கா 8 தங்கம், 12 வெள்ளி, 5வெண்கலம் வென்றது. ரஷ்யாவோ 6தங்கம், 7வெள்ளி, 7 வெண்கலம் வென்றது. சொந்த மண்ணில் நடப்பதால் இம்முறை ரஷ்யா ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. பெண்களுக்கான 100 மீற்றா் தடை தாண்டி ஓட்டத்தில் அமெரிக்காவின் டயோவா (12.86வி), அமெரிக்காவின் ஜெண்ணி ஆடம்ஸ் (13.08வி) முறையே வெள்ளி, வெண்கலம் வென்றனர். 800மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் சம்பியனான ரஷ்யாவின் யூரிபர்சா கோவ்ஸ்கி (1நிமிடம் 47.72வினாடி) தங்கம் வென்றார்.

ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டதில் 3பதக்கங்களையும் அமெரிக்கா தட்டிச்சென்றது. 10.15வினாடிகளில் ஓடிமுடிந்த மார்க்கஸ் பரன்சன் தங்கம் வென்றார். இவரைக் காட்டிலும் 18வினாடிகள் பின்தங்கிய கரிம்தாமசன் வெள்ளி மற்றும் மார்டி ஸ்கேல்ஸ் (10.40 வி) வெண்கலம் வென்றனர். பெண்களுக்கான 400மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்காவின் மானிக் ஹெனாகன் (50.63 வினாடிகள்) தங்கம் வென்றார். உயரம் தாண்டுதலில் ஒலிம்பிக் சம்பியனான ரஷ்யாவின் எலீனா சிலோசரன்கோ 2 மீற்றர் தூரம் தாண்டி தங்கத்தை கைப்பற்றினார்.(ப-7)


# கராச்சி மைதானத்தில் விளையாட இலங்கை கிரிக்கெற் அணி சம்மதம்

இலங்கைக் கிரிக்கெற் அணி எதிாவரும் ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. பாகிஸ்தானில் பாதுகாப்பு நிலைமை ஸ்திரமில்லாததன் காரணமாக இந்தச் சுற்றுப் பயணத்திற்கான திகதி நிர்ணயம் தாமதமடைந்தது.

இச் சுற்றுப் பயணத்தில் பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையேயான டெஸ்ட் கிரிக்கெற் போட்டித் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 20ஆம் திகதி ஆரம்மாக உள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 16ஆம் திகதி வரை இலங்கை, பாகிஸ்தான, சிம்பாப்வே அணிகளிடையேயான முக்கோணத் தொடரிலும் இலங்கை அணி விளையாடவுள்ளது.

இரண்டு டெஸ்ட் போடடிகளில் முதலாவது போட்டி கராச்சி மைதானததில் நடைபெறவுள்ளது 2002ஆம் ஆண்டு நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் செய்தபோது, அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அருகில் குண்டுவெடித்ததைத் தொடர்ந்து அத்தொடர் இரத்துச் செய்யப்பட்டதுடன், அதற்குப் பிறகு கராச்சி மைதானததில் எந்தவொரு டெஸ்ட் போட்டியும் நடைபெறவில்லை என்பது நினைவு கூரத்தக்கது.

இருவருட இடைவெளியின் பின் இலங்கை அணி கராச்சி மைத்தானத்தில் விளையாட சம்மதித்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெற சபையின் வேண்டுகோளை ஏற்ற இலங்கைக் கிரிக்கெற்சபை பாகிஸ்தானில் தமது பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பின் கராச்சி மற்றும் பைசலாபாத மைதானங்களில் விளையாடத் தயாராக உள்ளதாக தெரிவித்திருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெற்சபையின் ஊடகப் பேச்சாளர் அப்பாஸ் ஷெய்டி தெரிவிததுள்ளார்.(ப-7)



இந்தியா-இங்கிலாந்து, நோத்-வெஸ்ட் கிண்ண இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் இளம் வீரர் தினேஷ் கார்த்திக் பறந்து வந்து மயிரிழையில் இங்கிலாந்து வீரர் மைக்கல் வோனை 'ரன்-அவுட்' முறையில் ஆட்டமிழக்கச் செய்கிறார்.

## விளையாட்டு செய்திகள்

# மாவட்ட மட்டத்திலான துடுப்பாட்டத்தில் யாழ்.மாவட்ட அணி முதலிடத்தைப் பெற்றது

டம்புள்ளவில் கடந்த வாரம் இடம பெற்ற வடக்கு-கிழக்கு மாகாணங்களல் உள்ள மாவட மட அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் யாழமாவட்ட அணி முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.


இப் போட்டிகளின் மூலம் யாழ்.மாவட்ட அணியில் இருந்து எஸ்.லூட்சன், எஸ்.ஜனன்ராஜ், வி.விதுபாலா (சென்பற்றிக்ஸ் கல்லூரி); எஸ்.வினோத் (மானிப்பாய் இந்துக்கல்லூரி); ஆர்.றஜீவன், கே.ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி); ஆகிய ஆறு பேரும் வடக்கு-கிழக்கு மாகாண அணிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2மாத்திற்கு முன்பு 19 வயதுக்குட்பட்டோருக்கான மாவட்ட மட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட அணி வெனறு முதலாம் இடத்தைப் பெற்றதன் மூலம், யாழ்.மாவட்டத்தைச சேர்ந்த 7வீரர்கள் வட-கிழக்கு மாகாண அணிக்கு தெரிவுசெய்யப்பட்டனர்.

இதனையடுத்து 19வயதுக்குட்பட்ட துடுபபாட்ட போட்டியில் வட-கிழக்கு மாகாண அணிக்கு முதன முதலாக யாழ்.வீரர் வி.றஜீவ்குமார் (யாழ்.மததிய கல்லூரி) தலைமை காங்கியமை குறிப்பிடக்கக்கது.

இதேபோலவே 16வயதுக்குட்பட்ட வட-கிழக்கு மாகாண அணிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 6பேர் தெரிவுசெய்யப்பட்டமையால் யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணியில் இருந்து ஓர் வீரா வட-கிழக்கு மாகாண அணிக்கு தலைமைதாங்கும் சந்தர்ப்பம் கிடைகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

16வயதுக்குட்பட்ட யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணிக்கு, யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் மைதான செயலாளர் கே.செல்வராசா முகாமையாளராகவும், யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் நடைமுறை பயிற்றுனா ஏ.எஸ்.நிஸாந்தன் பயிற்றுனராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (7-ப)



மாவட்ட மட்டப் போட்டிகளில் தெரிவான 16மேற்றும் 19வயதுப்பிரிவு யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணி வீரர்களும் பயிற்றுவிப்பாளர்களும்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீ

**மீளளிப்பு நடைமுறைகள்:**

1.கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.

2.ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இரு வரும் வருகைதரவேண்டும்.

3.கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டுவரவேண்டும்.

- *இறப்புச் சான்றிதழ்*
- *இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)*
- *கடன் சான்றிதழ்*
- *பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்*
- *பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.*

4.கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

5.அ).மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெறமுடியும்.

ஆ).அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5 அங்.2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

## கிளிநொச்சி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 73.வ/கி/1699 | திரு. | சின்னத்தம்பி வேலுப்பிள்ளை |
| 74.வ/கி/1706 | திரு. | சண்முகம் ஆறுமுகநாதன் |
| 75.வ/கி/1718 | திரு. | இளையதம்பி நவரத்தினம் |
| 76.வ/கி/1754 | திரு. | இராமலிங்கம் இராமநாதன் |
| 77.வ/கி/1756 | திரு. | அந்தோனிப்பிள்ளை ஞானசேகரம் |
| 78.வ/கி/1758 | திரு. | நமசிவாயம் கந்தசாமி |
| 79.வ/கி/1785 | திரு. | செல்லையா இராசரத்தினம் |
| 80.வ/கி/1787 | திரு. | துரைசாமி துரைராசா |
| 81.வ/கி/1801 | திரு. | மார்க்கண்டு திருநாமலிங்கம் |
| 82.வ/கி/1825 | திரு. | சின்னத்தம்பி சிவஞானம் |
| 83.வ/கி/1920 | திரு. | கேசகர் கனகசபை |
| 84.வ/கி/1938 | திரு. | வையித்திலிங்கம் வீரபத்திரர் |
| 85.வ/கி/1940 | திரு. | சின்னையாஅல்லிமுத்து பேர்னாட்ஜேசுதாசன் |
| 86.வ/கி/1962 | திருமதி. | கண்மணி இராசையா |
| 87.வ/கி/1964 | திரு. | சின்னத்தம்பி வேலுப்பிள்ளை |
| 88.வ/கி/1978 | திரு. | சின்னையா மாரிமுத்து |
| 89.வ/கி/2003 | திரு. | கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் |
| 90.வ/கி/2010 | திரு. | தர்மலிங்கம் சுத்தானந்தன் |
| 91.வ/கி/2011 | திரு. | யாகப்பன் ரபேல் |
| 92.வ/கி/2025 | திருமதி. | தெய்வநாயகி சபாபதி |
| 93.வ/கி/2026 | திரு. | ஜயம்பிள்ளை கந்தையா |
| 94.வ/கி/2027 | திரு. | கந்தையா கணபதிப்பிள்ளை |
| 95.வ/கி/2040 | திருமதி. | திருஞானசோதி சுப்பிரமணியம் |
| 96.வ/கி/2080 | திரு. | பகவதி குணம் |
| 97.வ/கி/2109 | திருமதி. | மகிலவேணி உருத்திராராமநாதன் |
| 98.வ/கி/2129 | திருமதி. | நாகம்மா வல்லிபுரம் |
| 99.வ/கி/2143 | திருமதி. | பொன்னம்மா சிதம்பரப்பிள்ளை |
| 100.வ/கி/2150 | செல்வி. | இலட்சுமி ஆசைப்பிள்ளை |
| 101.வ/கி/2195 | திரு. | முருகன் ஈஸ்பரன் |
| 102.வ/கி/2212 | திருமதி. | பார்வதிப்பிள்ளை வல்லிபுரம் |
| 103.வ/கி/2213 | திரு. | முத்தர் தியாகராசா |
| 104.வ/கி/2219 | திரு. | ஐயம்பிள்ளை செல்லத்துரை |
| 105.வ/கி/2270 | திரு. | கந்தையா சிவகுமாரன் |
| 106.வ/கி/2275 | திரு. | கந்தையா நகுலேஸ்வரன் |
| 107.வ/கி/2283 | திரு. | முருகேசு கந்தையா |
| 108.வ/கி/2284 | திரு. | சின்னத்தம்பி பொன்னையா |
| 109.வ/கி/2285 | திரு. | செல்லையா பத்மநாதன் |
| 110.வ/கி/2317 | திருமதி. | செல்லம்மா செல்லையா |
| 111.வ/கி/2337 | திரு. | கனகசபை செல்வரத்தினம் |
| 112.வ/கி/2362 | திரு. | இராமநாதர் முத்துக்குமாரு |
| 113.வ/கி/2374 | திருமதி. | தங்கரத்தினம் பாலசிங்கம் |
| 114.வ/கி/2469 | திரு. | சவரிமுத்து சேவியர் |
| 115.வ/கி/2471 | திரு. | தம்பு விஜயரத்தினம் |
| 116.வ/கி/2477 | திரு. | வஸ்த்தியாம்பிள்ளை பயஸ் |
| 117.வ/கி/2486 | திரு. | குருசுமுத்து செல்லத்துரை |
| 118.வ/கி/2512 | திருமதி. | புவனேஸ்வரி வேதநாயகம் |
| 119.வ/கி/2530 | திருமதி. | மாலினி நவரட்ணம் |
| 120.வ/கி/2544 | திருமதி. | மரியஸ்ரெலா யுகனேஸ்வரன் |
| 121.வ/கி/2554 | திரு. | நாகநாதர் தியாகராசா |
| 122.வ/கி/2555 | திரு. | ஆறுமுகம் வைத்திலிங்கம் |
| 123.வ/கி/2569 | திரு. | கந்தையா நாகமணி |
| 124.வ/கி/2571 | திருமதி. | இராஜேஸ்வரி மாணிக்கவாசகர் |
| 125.வ/கி/2581 | திரு. | குமார் ஆனந்தராசா |
| 126.வ/கி/2589 | திரு. | தில்லையம்பலம் அன்ரன்ஜெயசேகரம் |
| 127.வ/கி/2605 | திரு. | வேலாயுதம் யோகநாதன் |
| 128.வ/கி/2632 | திரு. | வல்லிபுரம் சிவராசா |
| 129.வ/கி/2638 | திரு. | கார்த்திகேசு யோகேஸ்வரன் |
| 130.வ/கி/2639 | திரு. | தங்கராசா ஈஸ்வரன் |
| 131.வ/கி/2688 | திரு. | ஆறுமுகம் சோமசுந்தரம் |
| 132.வ/கி/2729 | திரு. | அந்தோனி யோசேப் |
| 133.வ/கி/2732 | திருமதி. | இராசலட்சுமி யோசெப் |
| 134.வ/கி/2743 | திருமதி. | ஞானப்பூ சுப்பிரமணியம் |
| 135.வ/கி/2755 | திரு. | சடையர் வேலுப்பிள்ளை |
| 136.வ/கி/2756 | திருமதி. | அருமைநாயகி இலங்கநாதன் |
நமது ஊரிலும் வீடுகளில் பூச்சிகள் வளருவது உண்டு. ஒருவர் வந்தார்." எனக்கு 3 ஆயிரம கரப்பான் பூச்சி அவசரமாகத் தேவைப் படுகிறது. எங்கே கிடைக்கும்?" என்றார்." கரப் பான் பூசசியா?" எதற்கு என்று கேட்டேன். "அது வேறு ஒன்றுமில்லை. நான் குடியிருக்கும் வாடகை வீட்டைக் காலி செய்யப் போகிறேன். வீட்டுச் சொந்தக்காரர் என்ன சொல்கிறார் என் றால், இந்த வீட்டுக்கு நான் குடி வந்தபோது எப்படி இருந்ததோ அதே நிலைமையில் விட்டு வீட்டுப் போகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். "அதனால் தான் கேட்டேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஜனாதிபதி- பிரதமருக்கு இடையிலான முறுகல் நிலை வலுவடைந்துவருகின்றது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான முறுகல் நிலை வலுவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியுடன் ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சி கூட்டணி அமைத்தமை தொடர்பில் அதிருப்தி கொண்டிருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியில தனக்கு ஆதரவானவர்களின் அணி ஒன்றை ஏற்படுத்தி வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி தனக்கு நெருக்கமான அமைச்சர்களுடன் கூட்டணி அமைத்துள்ளமை பிரதமருக்குப் பிடிக்காததால் இவர்களுக்கிடையிலான உட்பூசல்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் ஆளும் கூட்டணிக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இடம் பெற்று வரும் சம்பவங்கள், இந்த மோதல்கள் கட்சிக்குள் பாரிய பிளவுகளை தோற்றுவிக்கும் அளவிற்கு மோசமான நிலையினை உருவாக்கிவிடலாம் என சுதந்திரக் கட்சியின் முக்கியமானவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள கட்டடத்துக்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால நாட்டப்பட்ட அடிக்கல இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந் நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷவினால் இதற்கான அடிக்கல் சம்பிரதாய பூர்வமாக நாட்டப்பட்டமை தெரிந்ததே.

இந்நிகழ்வை தான் நாடு திரும்பும் வரை ஒத்திவைக்குமாறு லண்டனில் தங்கியிருந்த ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கோரியிருந்தபோதும் அவரது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டு அடிக்கல் நாட்டு வைபவம் இடம் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க இதனையொட்டி நாட்டப்பட்ட நினைவுக் கல்லில் உள்ள பித்தளைத் தகடு ஒன்றில சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்த போதும் அதில் பிரதமரின் பெயர் இடம் பெற்றிருக்க வில்லை.

இதனால் தான் பிரதமர் மகிந்த ராஸபக்ஷ ஜனாதிபதியுடன் முரண்பட்டுக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் பிரதமரால் நாட்டப்பட்ட அடிக்கல் திடீரெனக் காணாமல் போனதற்கு ஜனாதிபதி பிரதமர் முரணபாடே காரணமாக இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. (க-121,8)

# எரிபொருளின் விலை குறைப்பு! இலங்கையில் சாத்தியப்படாது

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகச் சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்துள்ள போதிலும், இலங்கையில் எரிபொருளின் விலையைக் குறைக்க முடியாதுள்ளதாக இலஙகைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகொட தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 50 டொலர் வரை அதிகரித்தபோதும், தற்போது அதன் விலை 43 டொலராகக் குறைந்துள்ளது.

ஆனால்,தேசிய சந்தைக்கான விநியோகம் மானிய அடிப்படையில் வழங்கப்படுவதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக சந்தையில் தற்போது 36 ரூபாவுககு விற்கப்படும் ஒரு லீற்றர் டீசலை இறக்குமதி செய்ய 46 ரூபா 50 சதம் செலவாகின்றது. அதேபோல், 25 ரூபா 50 சதமாக வற்கப்படும் ஒரு லீற்றர் மண்ணெண்ணையை இறக்குமதி செய்ய 39 ரூபா 60 சதம் செலவாகின்றது. 68 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் பெற்றோலை இறக்குமதி செய்ய 69 ரூபா 50 சதம் செலவாகின்றது.

இதனால் கடந்த ஓகஸ்ட் மாதம் வரை கூட்டுத்தாபனத்துக்கு 7 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.(க-61)

## இராசி பலன்

**08.09.2004**

**(ஆவணி 23, புதன்கிழமை)**
**நவமி பி.ப 1.14 மணி வரை**
**மிருகசீரிடம் காலை7.16மணி வரை**
**இராகுகாலம் 12.04 - 1.34 மணி வரை**
**சுபநேரம் 4.34-6.04 மணிவரை**

**மேடம்**
எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், அன்னியர் சந்திப்பு ,பணப்புழக்கம்.

**இடபம்**
காரிய தாமதம், பணவிரயம், கோப்படுதல், மாதர் நட்பு.

**மிதுனம்**
சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி ,தெய்வதரிசனம், புதிய தகவல்.

**கடகம்**
பிரயாணம், [illegible]பசெலவு, தொழில் கஷ்டம், காரிய தாமதம்.

**சிங்கம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, தொழில் வருமானம், சகோதரர்உதவி.

**கன்னி**
நண்பர்கள் உதவி, அதிகாரம், செய்தொழில் நன்மை. உற்சாகம்.

**துலாம்**
பிதா சிந்தை, இடமாற்றம், அதிகபிரயாசை, தன விரயம்,

**விருச்சிகம்**
காரிய தடங்கல், வீண்பிரச்சினை, போசன சுகம், பிரயாண பயம்.

**தனுசு**
களஸ்திர நன்மை, உற்சாகம், நல்ல செய்தி, அபூர்வசந்திப்பு.

**மகரம்**
தேகநலன், புதியதிருப்பம், காரிய சிந்தை, தெய்வ தரிசனம்.

**கும்பம்**
குடும்பக்கவலை, சிறுவியாதி, வீண் செலவு, முயற்சி, தாமதம்.

**மீனம்**
தாய்வழி உறவு, திடீர் நன்மை, கல்வியில் ஆர்வம், காரியதாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# காதல் ஜோடிகள் இருவர் விடுதியில் குண்டைவெடிக்க வைத்து தற்கொலை

(கொழும்பு)

மாவனல்ல அறநாயக்க பகுதியில் விடுதியொன்றில் காதல் ஜோடிகள் இருவர் குண்டு ஒன்றை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 8.45 மணியளவில் குண்டைவெடிக்க வைத்துத் தற்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட காதல் ஜோடிகளில் காதலன் இராணுவ வீரர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-8)

# படுகொலைகளுக்கான காரணத்தை அறியத்தருக!

## க.கா. குழுவுக்கு ஜயந்த தனபால கடிதம்

(கொழும்பு)

கிழக்கிலும் கொழும்பிலும் தொடரும் கொலைகளுக்கான காரணத்தை தமக்கு அறியத் தருமாறு கோரி அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப் பிவைத் துள்ளார்.

தற்போது இடம் பெற்று வரும் கொலைகள் மீண்டும் யுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கே வழிவகுககும் என கண்காணிப்புக் குழு அரச சமாதான செயலகத்தை எச்சரித்து வந்ததையடுத்தே ஜயந்ததனபால கண்காணிப்புக் குழுவுக்கு இத்தகைய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (க)

# ஆசிரிய இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்போர் கவனத்திற்கு!

(தாவடி)

அடுத்த ஆண்டுக்கான ஆசிரிய இடமாற்றத்திற்குரிய விண்ணப்ப முடிவுத் திகதிகளை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி வலயங்களுக்கு உள்ளான இடமாற்றங்களுக்கு 15.10.2004,வலயங்களுக்கு இடையிலான இடமாற்றங்களுக்கு 29.10.2004, மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றங்களுக்கு 30.9.2004, மாகாணங்களுக்கு இடையிலான இடமாற்றங்களுக்கு 30.09.2004 ஆம் திகதிவரை விண்ணப்ப முடிவுத் தினங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## நல்லூரரான் திருவடிக்கு



### பதிதொன்பதாம் திருவிழா

### ஆறுமுகன் இருக்கின்றானே

ஊரில்லார் உடைமையில்லார் உற்றம் சுற்றங்கள் இல்லார்
பேரில்லார் பொருளுமில்லார் பொன்பூமி எதுவும் இல்லார்
வேரில்லார் வீடும் இல்லார் வேதனை உருக்கொண்டார்க்கு
ஆரில்லா திருந்தும் நல்லை ஆறுமுகன் இருக்கின்றானே

சிற்பி

### உவந்தவர் தர வளர்ந்தான்

அச்சொட்டாய் நேரம் பார்ப்பான்
அழ கெல்லாந் தன்னில் வைத்தான்
மெச்சிடும் படியாய் நல்லை
வீதியில் கோவில் கொண்டான்
கச்சித மாகத் தன்னை
வேண்டிடும் அடிய வர்க்கு
உச்சமாய் வரங் கொடுத்து
உவந்தவர் தர வளர்ந்தான்

கவிமணி அன்னைதாஸன்

### நல்லை மணியுமிழும்...

நல்லை மணியுமிழும் நாதப் பெருமழையால்
எல்லை யிலா தின்ப மெய்துகிறேன் – வல்வினைசேர்
சொல்லிலடங்காவுன் சோதிப் பிளம் பொளிர
நல்லவையே செய்திடுவாய் நயந்து

கே.மகேஸ்வரி
சாவையம்பதி

### விழுந்து கும்பிட்டால் விலங்கம் இல்லையடி

நல்லூரை வலம் வந்து ஞானத்தங்கமே
நாங்கள் விழுந்து கும்பிட்டாலடி
வில்லங்கம் வாராதடி ஞானத்தங்கமே
விடிவிங்கே தோன்றுமடி ஞானத்தங்கமே
எல்லாமே தருவானடி ஞானத்தங்கமே
எங்களுக்கு நல்லூரான் தஞ்சமடி
பொல்லாப்பு ஒன்று மில்லையடி ஞானத்தங்கமே
பொற்கோவில் வலம் வந்து கும்பிட்டாலடி

தமிழீழன்

### வா வேலா

எழுதுகிறேன் கவிதை என் கந்தனுக்கு
எம் நாவில் வந்து நீ உறைய வேண்டும்

ஆறுதாய் மடியில் வளர்ந்தாய் நீ
ஆறுமுகம் கொண்டே அருள்வாய் நீ
மலைகள் பதியே! உன் இடம் விட்டாய்
குடியாய் எம்மிடம் குடியே கொண்டாய்

வறுமைகள் போக்கிட வந்திடு வேலா
வசந்தங்கள் காத்திட வந்திடு வேலா

பதியாம் நல்லூரில் அமர்ந்திடும் வேலா
பக்தர் களின் துன்பம் நீக்கிடு வேலா

அடியார் கூட்டம் அலை மோதிட
அருள் பாலித்திடவே நீ வா வேலா

வை.நிஷாந்தன்

# அனல் மின் நிலைய அமைவிடம் குறித்து கிளம்புகிறது சர்ச்சை

(புத்தளம்)

நுரைச்சோலை அனல் மின் நிலைய அமைப்புக் குறித்து, அரசு மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கே.ரபாயிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் அண்மையில் புத்தளம் அரசாங்க அதிபர் பணிமனைக் கூடத்தில் நடைபெற்றது.

இதிலேயே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும், பேசுகையில்,

ஐக்கிய தேசிய முன்னணி கடந்த ஆட்சிக் காலத்தின் போது, மக்களின் எதிர்ப்பினால் இத் திட்டத்தை கைவிட்டு இருந்தது.

ஆனால், மீண்டும் கூட்டமைப்பு அரசு இதனை நுரைச்சோலையில் அமைக்க முனைப்புடன் செயற்படுகின்றது. இதனால், பிரதேசத்தின் சுற்றாடலுக்கு ஊறு விளைவிப்பதுடன், விவசாயத்தையும், கடற்றொழிலையும் அழித்து, மக்களை நோயாளிகளாக மாற்றும் நிலையும் ஏற்படலாம் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

அவற்றைக் கண்டு கொள்ளாமல கண்மூடித்தனமாக அரசு, செயற்படுவார்கள் என்றால், அதற்கு எதிராகப் போராடவும் நாம் தயாராகவுள்ளோம்.

இங்கிருந்து வெளியேறும் புகையானது, அநுராதபுரம் மற்றும் வவுனியா பகுதிகளில் கரிய மழையினை பொழியச் செய்யும் என்றார்.

கிறிஸ்த்தவ சமய கலாசார, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோ இங்கு சமுகமளித்திருந்தார்.(ற-15)

# கைதான குடும்பஸ்தர் காணாமல் போனார்

(மன்னார்)

மன்னார் பேசாலை அகதி முகாமில் தங்கியிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஒரு மாத காலமாகக் காணாமல் போயுள்ளதாக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவிடம் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் கணேஸ் (வயது 27) என்பவரே காணாமல் போயுள்ளார். இவர் யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து தனது மனைவி, பிள்ளைகளுடன் பேசாலை அகதிமுகாமில் வசித்து வந்தார்.

இலங்கை மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளியாகப் பணியாற்றிய இவர் கடந்த ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி சம்பளம் பெறுவதற்காக வவுனியா சென்றதாகவும் அதன் பின்பு இதுவரை வீடு திரும்பவில்லை என்று அவரது மனைவி நாகம்மா கணேஸ் (வயது 24) பிரஜைகள் குழுவிடம் பதிவு செய்துள்ள புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் வைத்துத் தனது கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தான் அறிந்ததாகவும்,

இது குறித்து வவுனியா பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்ட போது குறிப்பிட்ட நபர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸாரால் தங்களுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ச)

# ஆட்சியாளர்கள் அமைதிவழியில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பார்களா?

## தேசிய எழுச்சிப் பேரவை மாவட்டச் செயலாளர்

(திருநெல்வேலி)

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை மதித்து அமைதிவழியில் இனப்பிரச்சினையை சிங்கள பேரினவாதிகள் தீர்த்து வைப்பார்கள் என்று நம்பமுடியுமா? இல்லவே இல்லை. இது எமது மக்களின் வரலாற்றுப் பட்டறிவாகும். தமிழர்கள் தமது விடுதலையைத் தாமே போராடிப் பெறவேண்டும். எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும், சிங்கள ஆட்சியாளர்கள் எமக்கான தீர்வினைச சும்மா கொடுக்கமாட்டார்கள். போராடி எடுத்தல் என்ற செய்கை தமிழினத்தின் இராணுவ அரசியல் பலத்திலேயே தங்கியுள்ளது. அந்தப் பலம்தான் எமக்கு நிரந்தர நிம்மதியான விடுதலையைப் பெற்றுதர வல்லது.

இவ் வாறு பருத் தித் துறை வேலாயுத மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வடமராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாநத சங்கம நிகழ்வில் கலந்து கொணடு சிறப்புரையாற்றுகையில் தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் சூ.சிறில் கூறினார்.

நிகழ்வில் மாவட்டப் பொருளாளர் க.சிவராசா உரையாற்றுகையில், தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உதயமாகிய தேசிய எழுச்சிப் பேரவையானது முதலில் தேசியத்திற்கும், தேசத்திற்கும் தனது சேவையை முன் நிலைப் படுத்தவேண்டும். விடுதலைதான் எமக்கு வேண்டும். விடுதலையின் பின்பு அபிவிருத்தி தானே எம்மை நாடி வரும். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்றார். (க-43)

# காணாமல்போனோர் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் கடந்த 1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட 35 நபர்கள் சம்பந்தமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் காணாமல் போனோர் குறித்த விசாரணைப் பிரிவு தற்போது விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இவ் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பிலிருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைப் பிரிவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

கீழே குறிப்பிடப்பட்ட பெயரினையுடைய காணாமல் போனோரின் பெற்றோர், பாதுகாவலர், முறைப்பாட்டுக்காரர் அல்லது இவர்களில் எவரேனும் கீழ் குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்திற்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

**சாவகச்சேரி பொலிஸ் நிலை யம் (09.09.2004 முதல் 12.09.2004 வரை)**

- சந்திரசேகரம் செல்தீபன் (இல.220, மீசாலை கிழக்கு, மீசாலை)
- வசந்தகுமார் (இல.38, சின்னலன்காடு, ஒழுங்கை, அரியாலை)
- ரி.ராமலிங்கநாதன் (மீசாலை வடக்கு, மீசாலை)
- தயாகுணம் தயாபரன் (அரியாலை சந்தி, யாழ்ப்பாணம்)
- வினாசித்தம்பி கோணேஸ்வரன் (அரியாலை, சாவகச்சேரி)
- ராமலிங்கம் தயாபரன் (இல. 404, சிப்பச்சிமாவடி, சாவகச்சேரி)
- எஸ்.லோகேஸ்வரன் (கைதடி கிழக்கு, கைதடி)
- சுப்பிரமணியம் தவச்செல்வம் (வலம்பூரி, கைதடிமேற்கு, கைதடி)
- சத்தியடோசன் விநாயகதம்பி (மீசாலை கிழக்கு, மீசாலை)
- மாணிக்கம் தயாபரன் (அமிர்தா வீதி, நாவற்குழி சந்தி, கைதடி)
- கண்ணன் அருள் பிரகாசம் (வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)
- முருகன் ஜயரத்தினம், முருகன் சிவராசா (மட்டுவில் கிழக்கு)

**யாழ். பொலிஸ் நிலையம் (13.09.2004 முதல் 15.09.2004 வரை)**

- அமிர்தநாதர் கிருஷ்டி ஜயநாதன் (கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
- என்.உதயகுமார் (அண்ணா கோவிலடி, யாழ்ப்பாணம்)
- பாக்கியநாதன் ஜசலியன் (குருநகர், யாழ்ப்பாணம்)
- படகுணசிங்கம் ராஜேந்திரன (நல்லூர், யாழ்ப்பாணம்)
- ரீகன் ரோஹறன் (கோவில் வீதி, யாழ்ப்பாணம்)
- சதாசிவம் சந்திரசேகரம் (கண்டி வீதி, அரியாலை)
- சதீஸ்வரன் பரமசோதி (பத்திரகோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
- சதீஸ்வரன் (பத்திரகோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
- சடகுணராசா பழனி (நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை)
- செல்லத்துரை ஞானசம்பந்தன (இல. 16/5, சீனியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)
- செல்லத்துரை செல்வராஜா (இல 586, சென் செபஸ்தியன் வீதி, யாழ்ப்பாணம்)
- செல்வநாயகம் தனபாலசிங்கம் (அரியாலை, யாழ்ப்பாணம்)
- செல்வராஜா ரகுநாதன் (மூதனவாடி, நல்லூர், யாழ்ப்பாணம்)
- சுமதி சுரேஸ்வரன் (இல. 451, நெடுங்குளம் வீதி, கந்தர் மடம் மேற்கு, யாழ்ப்பாணம்)
- தவராசா சிவரூபன் (இல. 979 துண்டி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
- திருவள்ளுவர் வெல்லயன் (நல்லூர் யாழ்ப்பாணம்)
- யோகன் (இல. 50/8, செட்டித தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்)
- செல்லையா கந்தசாமி (அளவெட்டி)
- செந்தமிழ் செல்வன் பழனி (மூளாய் தெற்கு, சுழிபுரம்)
- சின்னத்தம்பி முகுந்தன் (சுலிபுரம் மேற்கு சுழிபுரம்)
- யோகேஸ்வரம் சுந்தரலிங்கம் (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்)
- செல்வநாயகம் மகேந்திரன் (உரும்பிராய்) (ற)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் - குறள்

வலம்புரி

## ரணிலின் சூளுரைப்பு அரங்கேறுமா? அமுலாகுமா?

மூன்று மாத காலத்திற்குள் அனைத்துக் கட்சிகளையும் இணைத்து பலமான ஆட்சியை அமைப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கா அறிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்காவின் இந்த அறிவிப்பு சாதாரணமாக ஓர் எதிர்க்கட்சி விடுக்கும் அறிவிப்பாக மக்கள் எடுத்துக் கொண்டாலும், அந்த அறிவிப்புக்குள் இருக்கக்கூடிய இராஜதந்திரங்கள் ஆராயப்படவேண்டியவை ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பலவீனமான ஆட்சியை அமைத்தபோது ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அறவே இருக்கவில்லை. சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டிய போதே, ஆட்சியை மாற்றும் நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்கா ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அதை அவர் செய்யவில்லை.

அதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ரணில் கொண்டு வந்திருந்தால் அது நடைமுறைக்குச் சாத்தியமாகியிருக்கமுடியும். இருந்தும் அதை அவர் செய்யவில்லை.

அடுத்து ஹெல உறுமயவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் எடுக்கச் சென்றபோது பாராளுமன்றத்தில் ஏற்பட்ட வன்முறைகள் இழிவான நடவடிக்கைகள், ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆட்சியைக் கைப்பற்றும் சந்தர்ப்பத்தை கொடுத்திருந்தது. இருந்தும் அந்த சந்தர்ப்பத்தையும் அவர் பயன்படுத்தவில்லை.

மாறாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக்கு இடங்கொடுத்து அமைதியாக இருக்கப் போவது போன்ற கருத்துக்களை அவர் வெளியிட்டார். ஆனால் இப்போது திடீரென மூன்று மாத காலத்திற்குள் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடனும் ஆட்சியைக் கைப்பற்றி திடமான அரசை அமைக்கப்போவதாக அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பலத்தை பாராளுமன்றத்தில் நிருபிக்க முடியாமல் அந்தரப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் எந்தக் கட்சியுமே அதற்கு ஆதரவு வழங்க முன்வரவில்லை. இவ்வாறு ஆதரவு வழங்க முன்வராமைக்குக் காரணம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி நீடிக்காது என்ற எதிர்பார்ப்பும், ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரும் என்ற நம்பிக்கையிலும் ஆகும்.

எனினும் அந்த எதிர்பார்ப்பு - நம்பிக்கை காலம் கடந்து போனதால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இனியும் காத்திருப்பது பயனில்லை என்ற நிலைப்பாட்டில் அரசுக்கு ஆதரவு வழங்கும் தனது முடிவை அறிவித்துள்ளது.

எட்டு உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணையாமல், எதிர்க்கட்சி வரிசையில் இருந்த சந்தர்ப்பத்தை தவறவிட்ட ரணில் அந்தக் கட்சி அரசுக்கு ஆதரவு வழங்கப்போவதான அறிவிப்பை வெளியிட்ட கையோடு மூன்று மாதங்களுக்குள் புதிய ஆட்சியை அமைப்போம் எனக் கூறியிருப்பது இங்கு சிந்திக்கத்தக்குரியது.

இதற்கு மேலாக நாட்டில் இனிமேல் யுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை விரைவில் ஆரம்பிப்போம் என்ற ஜனாதிபதியின் அறிவித்தல் வெளியாகி 48 மணித்தியாலங்களுக்குள் வெளியாகிய ரணிலின் மேற்போந்த அறிவிப்பு ஏன்? எதற்காக? அது அரங்கேறுமா? அமுலாகுமா? என்ற வினாக்களை ஏற்படுத்தியுள்ளது.

# இ.தொ.காவின் நடவடிக்கைகள் ஒரு போதும் ஜீரணிக்க முடியாதவை

## முன்னாள் எம்.பி. சந்திரநேரு தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக ஜே.வி.பி.யினர் மூட்டியுள்ள தீயிற்கு எண்ணெய் ஊற்ற நினைக்கிறார் ஆறுமுகம் தொண்டமான் எனத் தெரிவித்துள்ளார் திகாமடுல்லமாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு.

அக்கரைப்பற்று ஜங்பிளவர் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவையொட்டிய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் ,

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு முண்டு கொடுக்கப்போவதாக அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அறிவித்திருக்கின்றார்.

இதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராகவும் தமிழ்த் தேசியத்தை அழிக்கவும ஜே.வி.பி.யினர் மூட்டியுள்ள தீயிற்கு எண்ணெய் ஊற்றுவதற்கு ஆறுமுகன் தொண்டமான் முனைந்துள்ளார்.

சில சலுகைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் தமிழ் மக்களை ஜே.வி.பி. போன்ற எதிர்சக்திகளிடம் சோரம் போகச் செய்யும் இத்தகைய நடவடிக்கைகள் ஜீரணிக்க முடியாதவையாகும்.

உரிமைப் போராட்டத்தினை எதிர்த்து வசைபாடும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளுடன் சார்ந்து அரசியல் நடத்துவது, ஓர் அரசியல் வியாபார நடவடிக்கையாகவே எமது மக்கள் கருதுகின்றனர்.

ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு முண்டு கொடுக்கப்போகின்றாரா? ஜே.வி.பிக்கு முண்டு கொடுக்கப்போகின்றாரா?

இன்று சமாதானத்தினை இல்லாதொழிக்க யுத்தம் செய்யத் தயாராகவுள்ளார்கள்.

இத்தகைய பிழைப்புவாத அரசியல் நடத்துபவர்களின் பின்னால்ச் சென்று அவர்களது சந்தர்ப்பவாத அரசியலுக்கு முண்டு கொடுப்பது கேவலமான ஒரு செயலாகும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை நிலை நிறுத்தி, இனத்துவேசிகளின் கொட்டத்தினை அடக்குவதில் முன்னின்று உழைத்து வெற்றிகண்ட லெப்.கேணல் பாவாவின் மறைவினால் இன்று அம்பாறை மாவட்டம் சோகத்தில் ஆழ்ந்திருக்கின்றது என்றார். (ற)

## திருக்குறள் வினாடி-வினா போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட திருக்குறள் வினாடி வினாப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் முதலாம் இடத்தை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியும் ,இரண்டாம் இடத்தை கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன.

இப்போட்டிகள் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறை விரிவுரையாளர்களால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது,

அத்துடன்,தரம் 10,11 மாணவர்களுக்கெனக் கோப்பாய்க் கல்விக் கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியின் முடிவுகளும்வெளியாகியுள்ளன.

இதில் முதலாம் இடத்தை வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தைச சேர்ந்த சு.கலையரசியும்,

இரண்டாம் இடத்தை வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த ச.சபிலாவும்,

மூன்றாம் இடத்தை நீர்வேலி அத்தியார் இந்துக கல்லூரியைச் சேர்ந்த அ.திவ்யாவும் பெற்றுள்ளனர்.

இவர்கள் யாவருக்குமான பரிசளிப்பு விழா எதிர்வரும 10 ஆம்திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளனது. (ற)

## கவி அரங்கில் பங்குபற்றுவோர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8,9,10 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் தமிழ் இலக்கிய விழாவில் கவி அரங்கில் கலந்து கொள்பவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் "வாலயமான கவிதை வழங்கு" என்ற பொருளில் புலவர் மருதூர் ஏ. மஜீத், கவிஞர் கோ. சி. வேலாயுதம், கவிஞர் அ.வில்வரெத்தினம், கவிஞர் எம்.பி. அருளானந்தம், கவிஞர் த. ஜெயசலன்,கவிஞர் புலேந்தி திலிப் காந்த், கவிதாயினி,வாசுகி சுதாகரன், பண்டிதர் ச.வே. பஞ்சாடசரம் ஆகியோர் கவிதை மழைபொழியவுள்ளனர்.(ற-5)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி நடைபெற்றுவரும் சமய நிகழ்வுகளில் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடாத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை குணபூஷணம நாகராஜாவின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

பக்கவாத்தியங்களாக வயலின் ஏ.ஜெயராமனும் மிருதங்கம் எஸ். துரைராசாவும், கெஞ்சிராவை எஸ். விமல்சங்கரும் வாசிக்கவுள்ளனர்.

இந்த சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்று இரவு 7 மணிக்கு, புன்னாலைக் கட்டுவன் தெற்கு தமிழ் மன்ற வில்லிசைக் குழுவினரின் கந்தன் கருணை எனும் தலைப்பிலான வில்லிசை இடம் பெறவுள்ளது.

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றுவரும் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் கம்பராமாயண தெய்வீக இசைப் பேருரைத்தொடரில் இன்று 'மாயமான்' எனும் தலைப்பில் இசைப்பேருரை இடம பெறவுள்ளது. (ற-7)

## ஊர்காவற்படையினரை விடுவிப்பதாயின் போராளிகளை விடுவிக்க வேண்டும்

### க.கா. குழு ஊடாக கோரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலையில் தம்மால் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவற்படையினரையும் விடுதலை செய்ய வேண்டுமானால், படையினர் வசமுள்ள தமது இரண்டு போராளிகளும் விடுதலை செய்யப்பட வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாகவே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளின் இக்கோரிக்கை தொடர்பாக தாம் இன்னமும் „அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்துக்கு அறிவிக்கவில்லை எனத் தெரிவித்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இந்தப் பிரச்சினைக்கு இலகுவான முறையில் தீர்வு காண்பதற்குத் தாம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவ் ஊர்காவற்படையினர் இருவரும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழீழ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## "கொட்டுக்கடப்பு" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முகமாலை சேகர் எழுதிய கொட்டுக்கடப்பு என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

வரவேற்புரையை கி.ஐங்கரன் நிகழ்த்துவார்.

ஆசியுரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும், வணபிதா இரா.ஸ்ராலின் அடிகளாரும், வாழ்த்துரையை பேராசிரியர் நா.ஞானகுமாரனும்,வெளியீட்டுரையை முதுநிலை விரிவுரையாளர் க. சிவானந்தமூர்த்தியும, ஆய்வுரையை கலாநிதி க. குணராசாவும் ,தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும் நிகழ்த்துவார்கள்.

நன்றியுரையை மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய மேலாளர் ஓ.கே. குணநாதன் தெரிவிப்பார். (து)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீ செய்த தவறுகளை வாழ்த்து . அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழி காட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள். இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள். உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதைக் குறித்து நீ கவலைப்படவேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு.

சுவாமி விவேகானந்தர்

# மீட்புநிதிக் கடன் சான்றிதழை தவறவிட்டோர் கவனத்திற்கு

தமிழீழ மீட்பு நிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர் 2004 ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்பு பட்டியலில் தமது பெயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடையாள ஆவணத்துடன் கீழ்க்காணும் நேர அட்டவணைக் கிணங்க வருகைதந்து, 2004 ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

**10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

மானிப்பாய் அரசியற்துறை செயலகத்தில் காலை 8.30 - 10.00 மணிவரையும், சண்டிலிப்பாய் அரசியற்துறை செயலகத்தில் மு.ப. 10.30- 12.00 மணிவரையும், சுன்னாகம் அரசியற்துறைச் செலகத்தில் ந.ப. 12.30 - 2.00 மணிவரையும், நீர்வேலி அரசியற்துறை செயலகத்தில் பி.ப. 2.30 - 4.00 மணி வரையும்,

**11 ஆம் திகதி சனிக்கிழமை**

வல்வெட்டித்துறை அரசியல் துறைச் செயலகத்தில் காலை 8.30 - 10.00 மணிவரையும், தம்பசிட்டி அரசியற்துறை செயலகத்தில் மு.ப. 10.30 - 12.00 மணி வரையும், கரவெட்டி அரசியற்துறை செயலகத்தில் பி.ப. 1.00 - 3.00 மணி வரையும்

**12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**

கைதடி அரசியற்துறை செயலகத்தில் காலை 8.30 - 9.30 மணிவரையும், சங்கத்தானை அரசியற்துறைச் செயலகத்தில் மு.ப. 10.30 - 12.00 மணிவரையும், நல்லூர் அரசியற்துறை செயலகத்தில் பி.ப. 3.00 - 4.30 மணிவரையும்,

**13 ஆம் திகதி திங்கட்கிழமை**

வேலணை அரசியல்துறைச் செயலகத்தில் காலை 8.30 - 9.00 மணிவரையும், யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மு.ப. 11.30-1.00 மணிவரையும்,

**14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பி.ப. 2.45 - 4.00 மணி வரையும் இம் மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற)

# இலங்கையில் மீண்டும் யுத்த அபாயம் இந்திய ஊடகங்கள் தீவிர பிரசாரம்

இலங்கையில் அமைதி நிலவிவரும் இவ்வேளையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாக சில இந்திய ஊடகங்கள் கடந்த சில நாட்களாகத் தீவிரமாக கருத்துக்களை வெளியிட்டுவருகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவியேற்றதன் பின்னர், இலங்கையின் அரசியலில் ஸ்திரமின்மை தொடர்ச்சியாக நிலவிவருவதனைக் சுட்டிக்காட்டியுள்ள இந்திய ஊடகங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்குமிடையிலான முரண்பாடுகள் அதிகரித்துவருகின்றன என தெரிவித்துள்ளன.

இதன் பிரகாரம் இந்தியாவின் கடலோரப் பாதுகாப்பினை அந்நாடு பலப்படுத்தியுள்ளது. இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் இந்தியாவின் கடலோரப் பாதுகாப்புக்கு ஏற்படும் பாரிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் இந்தியக் கடற்படையினரை உஷார் நிலையில் அந்த நாடு வைத்திருப்பதாகவும், இந்திய பாதுகாப்பு படைத்தரப்பினரை ஆதாரம்காட்டி நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-121

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அனைத்து பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை கைலாசபதி கலையரங்கில் இடம்பெற உள்ளது.

இதில் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

(ப)

## சமாதானம் இழுத்தடிக்கப்படுமானால்....

தெரிவிக்கையில் கூறியதாவது,

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள மந்தமான சூழ்நிலையினால் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு காலப்போக்கில் அபாயகரமான நிலைமை ஏற்படுவதை எவராலும் தடுக்கமுடியாது. தற்போது யுத்தம் நடைபெறவில்லை என்ற காரணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு இனிமேல் யுத்தம் ஒன்று ஏற்படமாட்டாது என்ற முடிவுக்கு நாம் வரமுடியாது.

சமாதான முயற்சிகள் இழுத்தடிக்கப்பட்டு வருமானால் அம்முயற்சி அர்த்தமற்றதாகப் போகும் பட்சத்தில் மீண்டும் யுத்தமொன்று ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும்.

இந்நிலையில் இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையின் கீழ் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குரிய திகதிகளை நிர்ணயிக்குமாறுகோரி பத்து பதினொரு மாதங்கள் சென்றநிலையில் அக்கருமத்தை நாம் முன்னெடுக்கமுடியாத நிலையில் இருப்போமானால் அது சமாதானத்திற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடியதாகவில்லை. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும்படி இருதரப்பினரையும் சந்தித்துக் கேட்டுள்ளோம். அண்மையில் ஜனாதிபதியையும் சமாதானம் தொடர்பாகச் சந்தித்துப் பேசியுள்ளோம்.

இச்சந்திப்புக்களில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வற்புறுத்திவந்துள்ளோம்.

இந்நிலையில் கடந்த காலங்களில் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் எதனையும் அவை நிறைவேற்றவில்லை. இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக ஏதேனும் தீர்வுகிட்டினாலும் அது நடைமுறையில் நிறைவேற்றப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எபபோதும் தயாராகவே உள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக நிலவிவருகின்ற சூழ்நிலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசிவருகின்றோம். வன்முறைகளைப் பொறுத்தவரையில் பலருக்கும் மாறாக வன்முறைகள் நடைபெறுகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் வன்முறைகள் இடம்பெறுகின்றன. அரசில் உள்ள சிலரும் வன்முறைகளைத் தூண்டக்கூடிய வகையில் செயற்படுகின்றனர்.

எங்களைப் பொறுத்தவரையில் வன்முறைகளை நாம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதை விரும்புகின்றோம்.

சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்கப்படாவிட்டால் வன்முறைகள் தொடர்வதை எம்மால் கட்டுப்படுத்தமுடியாது போய்விடும் எனவும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

(ம-121)

## வவுனியாவில் சிறுமி பாலியல் பலாத்காரம்

# குற்றவாளிக்கு 15 வருட கால கடுழியச் சிறைத்தண்டனை!

(வவுனியா)

13 வயதுச் சிறுமியை பாலியல் பலாத்காரம் புரிந்த நபர் ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று 15 வருட கடுழியச் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வவுனியா கச்சைக்கொறிய எனும் பகுதியில் பிரஸ்தாப சிறுமியை கடத்திச்சென்று பாலியல் பலாத்காரம் புரிந்தமை தொடர்பாக மூன்று பேருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டு, வவுனியா நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வந்தது.

விசாரணைகளின் முடிவில் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தமையில் மூன்று பேர் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டதை அடுத்து வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி யேமையா விஸ்வநாதன் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

(இ-8)

## கதிர்காமர்...

என வெளிநாட்டு அமைச்சு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது..

இதேவேளை, கதிர்காமர் ஜப்பானியப் பிரதமர் கொய்சுமியையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(இ-121)

## எழுதுவினைஞர்...

மலை-189, மட்டக்களப்பு-201, அம்பாறை-198, பதுளை-207, கிளிநொச்சி-192, இரத்தினபுரி-202, மாத்தளை, புத்தளம் ,மாவட்டங்களுக்கு தலா 205 புள்ளிகளும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகிக்கும் 2668 பேருக்கு இம்மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளிலும், அடுத்த மாதம் 2 ஆம், 3 ஆம், 9ஆம் திகதிகளிலும் கொழும்பிலுள்ள பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

(ம)

## ஜனாதிபதியின்...

வையென்று உயர் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த இரண்டு சட்டமூலங்களிலும் சேர்க்கப்பட்டுள்ள ஒரு சில சரத்துக்களை திருத்தியமைத்தால் அல்லது நீக்கினால் அவை தொடர்பான முடிவுகளை தளர்த்திக் கொள்ளமுடியுமென நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

புகையிலை வரி மறுசீரமைப்பு, உள்நாட்டு வரி சிறப்பு ஒழுங்கமைப்பு ஆகியவையே அரசியல் அமைப்புக்கு முரணானவை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆனால் புகையிலை வரி மறுசீரமைப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படவேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்படவேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-08)

## அமைச்சரவையில் மாற்றம்...

சர் மங்கள சமரவீரவிடம் உள்ள தகவல்துறை அமைச்சு அனுர பிரியதர்சன யாப்பாவுக்கும் வழங்கப்படவிருக்கின்றன.

பெரும்பாலும் பீலிக்ஸ் பெரேராவின் போக்குவரத்து அமைச்சும் மாற்றம்பெறவிருக்கின்றன. இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்த மூவருக்கும் பிரதியமைச்சு பதவிகள் வழங்கப்பட ஏற்பாடுகள் நடைபெற்றபோதும் பிரதியமைச்சுகளில் வெற்றிடங்கள் இல்லை எனத் தெரியவருகிறது.

அரசாங்கத்தில் இணைந்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு நகர அபிவிருத்தி மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சை விட்டுக்கொடுக்க அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மறுத்திருக்கின்றார். இதனையடுத்து நேற்று முன்தினம் கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தினேஸ் குணவர்த்தனவுக்கு போக்குவரத்துத்துறை அமைச்சை வழங்குதவற்கான ஆலோசனையைத் தெரிவித்தார். இதனை தினேஸ் குணவர்த்தன ஏற்றுக்கொண்டதையடுத்து நேற்றுப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இது இவ்வாறிருக்க இலங்கைத தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சையும், அதன் பிரதி அமைச்சையும் பொறுப்பேற்பதென நேற்று தீர்மானித்துள்ளது.

(இ-121-08)

## கழுத்தில்...

கூறி அழைத்துச் சென்றதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

கழுத்துப் பகுதியில் பலத்த வெட்டுக் காயத்துடன் சடலம் காணப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சடலத்தை நேரில்சென்று பார்வையிட்ட உத்தியோகப்பற்றற்ற நீதிபதி திருமதி லிங்கா துரைராஜா அதனை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் யாழ்.நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(இ-19-51-50)


**முகமாலை சேகரின்**

**'கொட்டுக் கடப்பு'**

**சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா**



**இடம்:** கைலாசபதி கலையரங்கம்,
யாழ். பல்கலைக் கழகம்.

**காலம்:** 08. 09. 2004 புதன்கிழமை

**நேரம்:** பி.ப. 3.00 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**விழா ஒருங்கிணைப்புக் குழு**

(8779)



**நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா**

**இடம்** – நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்

**காலம்** –09.09.2004 வியாழக்கிழமை காலை 10.00 மணி

**தலைவர்** – கலாநிதி க.குணராசா
மாநகர ஆணையாளரும், சைவசமய
விவகாரக் குழுவின் தலைவரும்.

**ஆய்வுரை** –திரு.க.சிவராமலிங்கம்
முன்னாள் பிரதி அதிபர்,
யாழ். இந்துக்கல்லூரி.

மேற்படி விழாவில் பங்குகொண்டு பயனுள்ள பல ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் நல்லைக் குமரன் மலரினைப் படித்துப் பயன்பெறுமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு**

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

(C-437)



**பதவிவெற்றிடம்**

⇨ **ஒப்புநோக்குநர்கள்** - பெண்கள்
(க.பொ.த. உயர்தரம் சித்தி)

⇨ **கணினி பக்க அமைப்பாளர்கள்**
- பெண்கள் (கணினியில் தமிழில் ரைப்பிங் செய்து பக்கம் அமைக்கும் அனுபவம் பெற்றவர்கள் மட்டும்)

⇨ **பாதுகாப்பு ஊழியர்கள்** - ஆண்கள்
(பகல், இரவு கடமை)

தகுதி உடையவர்கள் 09.09.2004 அன்று பிற்பகல் 3 மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

குறிப்பு:- அலுவலகத்திற்கு அண்மையிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**ஆளணி முகாமையாளர்**
வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.